# குடியேற்றம் அல்லாத வீசாக்கள்

முகப்பு/ வீசாக்கள் /குடியேற்றம் அல்லாத வீசாக்கள்

ஐக்கிய அமெரிக்காவிற்கான கொழும்புத் தூதரகத்தின் தூதரகப் பிரிவானது தற்காலிகமாக ஐக்கிய அமெரிக்காவிற்குள் நுழைபவர்களுக்கு வீசா சேவையினை வழங்குவதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ளது. இத்தகைய குடியேற்றம் அல்லாத வீசா பொதுவாக ஐக்கிய அமெரிக்காவிற்கான பயண நோக்கத்தின் அடிப்படையில் தங்கியிருப்பதுடன், வீசாவிற்கு விண்ணப்பிப்பதற்கான பயணிகளின் தேவைகளையும் அவசியங்களையும் கொண்டுள்ளது.

குடியேற்றம் அல்லாத வீசா வகைகளின் விபரக்கொத்து (directory of nonimmigrant visa categories) உள்ளடங்கலாக ஐக்கிய அமெரிக்காவின் குடியேற்றம் அல்லாத வீசா (nonimmigrant U.S. Visa) ஒன்றிற்காக விண்ணப்பிப்பதற்குப் பூரண தகவல்களுக்காக தயவு செய்து எமது உலகளாவிய ஆதரவு நிலையத்தின் (GSS) இணையத்தளத்திற்கு விஜயம் செய்யவும்.

## நேர்முகத்தேர்விற்கான விலக்களிப்பு நிகழ்ச்சித் திட்டம்

ஐக்கிய அமெரிக்காவிற்கு மீள்வரும் பயணிகள் சில சந்தர்ப்ப சூழ்நிலைகளில் நேர்முகத்தேர்வு ஒன்றிற்காக ஐக்கிய அமெரிக்கத் தூதரகத்திற்குச் சமூகமளிக்காமல் தமது வீசாக்களைப் புதுப்பிக்கின்றார்கள். நீங்கள் இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்குத் தகுதியுடையவராக இருப்பின், தூதரகத்தின் வேலை நாட்களின்போது உங்களுடைய வீசா விண்ணப்பப் படிவத்தினை அனுப்புதல் வேண்டும். நீங்கள் மீண்டும் ஒரு வீசாவிற்குத் தகுதியானவர் என அடையாளம் காணப்படுமாயின், உங்களுடைய பிரயாணக் கடவுச்சீட்டு மற்றும் புதிய வீசா என்பன ஒருசில நாட்களுக்குள் அழைப்பிற்காகக் கிடைக்கப் பெறும்.

தகைமைகள் பற்றி அறிந்துகொள்வதற்காக தயவு செய்து Interview Waiver Drop Box Program page என்ற பகுதிக்கு விஜயம் செய்யவும்.

## ஐக்கிய அமெரிக்காவின் தூதரகத்திற்குச் செல்லும்போது நீங்கள் எதிர்பார்ப்பவை

குடியேற்றம் அல்லாத வீசாவிற்கான பிரிவானது வீசா விண்ணப்பதாரிகளுக்கு ஒரு சௌகரியமான வீசா செயல்முறையினை வழங்குவதனை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தமுயற்சியின் ஒரு பகுதியாக விண்ணப்பதாரிகள் தமது நேர்முகத்தேர்வு நியமனத்திற்கு 15 நிமிடங்களுக்கு முன்னர் மட்டும் ஐக்கிய அமெரிக்காவின் தூதரக நுழைவாயிலில் வருகை தருவது அவசியமானது. இச்சட்டத்தின் கடுமையான அமுலாக்கமானது தூதரகத்திற்கு வெளியே தேவையின்றி விண்ணப்பதாரிகள் நீண்ட நேரமாக வரிசையில் நிற்றலையும் காத்திருத்தலையும் தவிர்ப்பதற்கு இடம் கொடுக்கின்றது. வழங்கப்பட்ட நேர்முகத்தேர்வு நியமன நேரத்திற்கு சில மணித்தியாலங்களிற்கு முன்னர் வருகை தரும் குறிப்பிட்ட விண்ணப்பதாரி ஒருவருக்கு எந்தவிதமான மேலதிக நன்மைகளும் இதில் கிடைக்கப் போவதும் இல்லை.

### தூதரக வளாகத்தில் இலத்திரனியல் சாதனங்களுக்கு அனுமதி மறுப்பு

அனைத்து விண்ணப்பதாரிகளினதும் அலுவலர்களினதும் பாதுகாப்பினையும் காவலினையும் கருத்தில் கொண்டு, தூதரக வளாகத்தில் பின்வரும் இலத்திரனியல் சாதனங்களைக் கொண்டு வருவதற்கு வீசா விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

- எந்தவொரு வகையான இலத்திரனியல் மற்றும் பற்றரி மூலம் இயங்கும் சாதனங்கள் (கையடக்கத் தொலைபேசி, எண்ணிமப் புகைப்படக் கருவி / கமரா, மடிக்கணனி, இசைத்தட்டு, PSP, USB thumb drive, mobile tablet என்பன போன்ற சிறிய விளையாட்டுக் கருவிகள்).
- சுடர் உருவாக்கும் சாதனம் மற்றும் இலகுவில் நெருப்பை உருவாக்கக் கூடிய சாதனம்.
- கூர்மையான உபகரணங்கள்
- On/Off ஆளி உடைய ஏனைய சாதனங்கள்

இவ்வகையான சாதனங்களைக் கொண்டுவரும் விண்ணப்பதாரிகள் உள்ளே நுழைவதற்கு அனுமதி மறுக்கப்படுவதுடன், அவர்களுக்குப் புதியதொரு நேர்முகத்தேர்வினை ஏற்பாடு செய்வதற்கும் வேண்டுகோள் விடுக்கப்படும்.

நீங்கள் உங்களுடைய நேர்முகத்தேர்வு நியமனத்திற்கு முன்னர், உங்களுடைய இலத்திரனியல் சாதனங்களைத் தூதரகத்திற்கு வெளியே பாதுகாப்பான ஓர் இடத்தில்

கவனமாக வைத்துவிட்டுச் செல்வதற்கான ஒழுங்குகளைத் தயவுசெய்து மேற்கொள்ளவும். உங்களுக்கு இதனால் ஏற்படும் அசௌகரியங்களுக்கு நாம் வருத்தத்தைத் தெரிவிப்பதுடன், தங்களின் ஒத்துழைப்பிற்கு எமது பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## இராஜதந்திரிகளுக்கான வீசா/ உத்தியோகபூர்வ வீசா (A, G, and C-3)

நீங்கள் ஒரு வெளிநாட்டு அரசாங்கத்திற்கான அல்லது சர்வதேச நிறுவனங்களுக்கான அல்லது ஏதாவது குறிக்கோள்களுக்கான உத்தியோகபூர்வ நடவடிக்கைகளின் பொருட்டு ஐக்கிய அமெரிக்காவிற்குப் பயணம் ஒன்றினை மேற்கொள்பவராயின், நீங்கள் இராஜதந்திரிகளுக்கான வீசா அல்லது உத்தியோகபூர்வ வீசா ஒன்றிற்கு விண்ணப்பிக்கலாம் (a diplomatic or official visa (A, G, or C-3 visa).

***செயல்முறைநேரம்:*** சாதாரண அல்லது A & G வீசா செயல்முறைகளுக்கு பூரணப்படுத்திய வீசா விண்ணப்பப் படிவத்தினையும் அதற்குத் தேவையான அனைத்து ஆவணங்களையும் தூதரகமானது பெற்றுக்கொண்ட நாளிலிருந்து ஆகக்குறைந்தது மூன்று வேலை நாட்களினை எடுக்கும்.

***தொடர்பு:*** இராஜதந்திரிகளுக்கான வீசா தொடர்பான தகவல்களுக்காகவும் வினாக்களுக்காகவும், நீங்கள் ConsularColombo@state.gov என்பதில் குடியேற்றம் அல்லாத வீசா பிரிவினைத் தொடர்புகொள்ளவும்.

### “A” வீசா

ஐக்கிய அமெரிக்காவிற்கு தமது விஜயத்தின் நோக்கத்தினைப் பொருட்படுத்தாமல் A-1 வீசாவிற்கான தகுதியைப் பெறும் அரசாங்க அல்லது இராஜதந்திரித் தலைவர்களைத் தவிர, இவ்வகையான வீசா ஐக்கிய அமெரிக்காவிற்குள் நுழையும் இராஜதந்திரி மற்றும் ஏனைய அரசாங்க அதிகாரிகளுக்குத் தேவையான வீசாவிற்கான காரணத்தைப் பொறுத்துஅமைகின்றது.

A-1 அல்லது A-2 வீசாவிற்குத் தகுதி பெறுவதற்கு, தமது தேசிய அரசாங்கத்தின் சார்பில் அவ் அரசாங்கத்தின் பிரத்தியேகமான உத்தியோகபூர்வ நடவடிக்கைகளில் பங்குகொள்வதற்காக ஐக்கிய அமெரிக்காவிற்குப் பயணம் செய்ய வேண்டியுள்ள தனி

ஒருவர் இங்கு கருத்திற் கொள்ளப்படுகின்றார். தமது மாநிலம், மாகாணம், வட்டாரம் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களைப் பிரதிபலிக்கும் உள்ளூராட்சி அதிகாரிகள் “A” வீசா அந்தஸ்திற்குரிய தகுதியைப் பெறமாட்டார்கள். அவர்களுக்கு B-1 அல்லது B-2வீசா தேவைப்படுகின்றது. “A” வீசாவிற்கு வீசா விண்ணப்பப் படிவத்திற்கான கட்டணம் அறவிடப்படமாட்டாது.

**குறிப்பு** : ஐக்கிய அமெரிக்காவிற்குப் பயணம் செய்கின்ற அரச அதிகாரிகள் வர்த்தக நிலைமைகளின் அரச சார்பற்ற செயற்பாடுகளைச் செய்வதற்கும் அல்லது சுற்றுலாப் பிரயாணியாகப் பயணம் செய்வதற்கும் பொருத்தமான குடியேற்றம் அல்லாத வீசா அவர்களுக்குத் தேவைப்படுகின்றது. மேலதிக தகவல்களுக்காக தயவுசெய்து **வர்த்தகம் / சுற்றுலாப் பயணிகளுக்கான வீசா** (Business/Tourist Visas) என்ற பகுதியினைப் பார்க்கவும். பொதுவாக, B1 / B2 வீசா விண்ணப்பதாரிகள் நேர்முகத்தேர்விற்காகத் தூதரகத்தில் தனிப்பட்டரீதியாக வந்து சமூகமளிப்பதற்கு வேண்டப்படுகின்றார்கள். இராஜதந்திரிகளுக்கான பிரயாணக் கடவுச்சீட்டில் பயணம் செய்யும் B-1/B-2 வீசா விண்ணப்பதாரிகளுக்கு வீசா விண்ணப்பப் படிவத்திற்கான கட்டணம் அறவிடப்படமாட்டாது.

## “G”வீசா

“G” வீசாவிற்குத் தகுதி பெறுவதற்கு, விண்ணப்பதாரி அரசாங்கக் கடமைகள் நிமித்தம் ஐக்கிய அமெரிக்காவிற்குள் நுழையக்கூடியவராக இருத்தல் வேண்டும். ஒரு சர்வதேச நிறுவனத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட அரசாங்கத்தின் நிரந்தரமான குறிக்கோளின் அங்கத்தவர்கள் G-1 வீசாவிற்குத் தகுதி பெற்றவர்கள் ஆவர். நியமிக்கப்பட்ட சர்வதேச நிறுவனத்தின் கூட்டங்களுக்குச் சமூகமளிப்பதற்காகத் தற்காலிகமாக ஐக்கிய அமெரிக்காவிற்குப் பயணம் செய்யும் அங்கீகரிக்கப்பட்ட அரசாங்கத்தின் பிரதிநிதிகள் G-2 வீசாவிற்குத் தகுதி பெற்றவர்கள் ஆவர். அங்கீகரிக்கப்படாத பிரதிநிதிகள் அல்லது அரச சார்பற்ற உறுப்பினர்கள் G-3 வீசாவிற்குத் தகுதிபெற்றவர்கள் ஆவர். ஐக்கிய நாடுகள் உள்ளிட்ட நியமிக்கப்பட்ட ஒரு சர்வதேச நிறுவனத்தில் ஒரு நியமனத்தைப் பெறுவதற்கு ஐக்கிய நாடுகளுக்குச் செல்கின்ற தனிப்பட்ட நபர் ஒருவருக்கு வழங்கப்படும் வீசா G-4 ஆகும். இந்த வீசாவின் வகைப்பாடுகள் வீசாவிற்கான விண்ணப்பத்தின் கட்டணத்திலிருந்து விலக்கப்படுகின்றது.

## “C” வீசா

ஐக்கிய அமெரிக்காவின் ஊடாக இன்னொரு நாட்டிற்குப் பிரயாண மாற்றத்தில் நுழைவதற்கு மாத்திரம் வெளிநாட்டு அரச அதிகாரிகளுக்கும், அவர்களுடைய குடும்ப உறுப்பினர்களுக்கும் மற்றும் அவர்களுடைய உதவியாளர்கள், பணியாளர்கள் அல்லது தனிப்பட்ட அலுவலர்கள் ஆகியோருக்கான வீசா வகையாக C-3 வீசா அமைகின்றது.

## இராஜதந்திரிகளின் நெருங்கிய குடும்ப உறுப்பினர்களுக்கான வீசாக்கள்

A-1, A-2, G-1, G-2, G-3 மற்றும் G-4 வீசாவினை வைத்திருப்பவர்களின் நெருங்கிய குடும்ப உறுப்பினர்கள் ஆரம்பநிலை வீசாவினை வைத்திருப்பவர் ‘இணைந்து போதல்’அல்லது உடன் தொடர்ந்து செல்லுதல் என்ற நிலையில் அவர்கள் இருப்பார்களாயின், முக்கியமான வேற்று நாட்டினரின் அதே வகைப்பாட்டில் வழித்தோன்றல் நிலையானது உரிமையளிக்கப்படுகின்றது. ஒரு வீட்டிலுள்ள குடும்ப அங்கத்தவர்களில் வாழ்க்கைத்துணை மற்றும் திருமணம் செய்யாத எந்த வயதினையும் உடைய மகன்மார் அல்லது மகள்மார் நெருங்கிய குடும்ப உறுப்பினர்களாக வரையறை செய்யப்படுகின்றனர். நெருங்கிய குடும்ப உறுப்பினர் என்பது, இராஜதந்திரிகளின் அல்லது உத்தியோகபூர்வ பிரயாணக் கடவுச்சீட்டு அல்லது உத்தியோகபூர்வ பிரயாணக் கடவுச்சீட்டு அல்லது பயணம் அல்லது வேறு அனுமதிகள் என்பன போன்ற உரிமைகளுக்கும் நன்மைகளுக்குமான தகுதியினைப் பரிசோதித்தன்படி, சர்வதேச நிறுவனம் அல்லது அரசாங்கத்தின் மூலம் அனுப்பும் உங்களுடைய குடும்ப உறுப்பினராக அங்கீகரிக்கப்பட்டவர் ஏனைய சில வீடுகளில் வசிக்கும் ஒரு உறுப்பினராக அல்லாமல், வழக்கமாக உங்களுடைய வீட்டில் வசிக்கும் ஒரு நபராகவும் இருக்கலாம். ஒரு வீட்டில் வசிக்கும் குடும்ப உறுப்பினர்கள் பற்றிய மேலதிக தகவல்களுக்காக http://travel.state.gov/content/visas/english/other/diplomat-foreign-government-official.html என்ற இணையத்தளத்தைப் பார்க்கவும். மேலே விபரிக்கப்பட்டதன்படி, ஒரு நெருங்கிய குடும்ப உறுப்பினராகத் தகுதியில்லாத ஒரு குடும்ப உறுப்பினர் விருந்தினர் வீசா (visitor (B-2) visa) ஒன்றிற்கான தகுதியினைப் பெறலாம். விருந்தினர் வீசா விண்ணப்பதாரி வீசா நேர்முகத்தேர்விற்காக தூதரகத்திற்குச் சமூகமளிக்கப்படுவதற்கு வேண்டப்படுவதுடன், வீசா விண்ணப்பப் படிவம் மற்றும் வீசா வழங்கலுக்கான கட்டணத்தைச் செலுத்த வேண்டியும் உள்ளது. (பொருந்துமாயின்).

**முதன்மை விண்ணப்பதாரிக்காகத் தேவைப்படும் மேலதிகமான ஆவணங்கள்**

1. **இராஜாங்கக் குறிப்புரை :**

இராஜாங்கக் குறிப்புரை என்பது ஐக்கிய அமெரிக்காவிற்கான உங்களுடைய பயணத்திற்கான உத்தியோகபூர்வ நோக்கத்தினதும், அந்தஸ்து நிலைப்பாட்டினதும் எழுத்து மூலமான ஓர் உறுதிப்படுத்தல் ஆகும். A மற்றும் C-3 வீசா வைத்திருப்பவர்களுக்காக இராஜாங்கக் குறிப்புரை பொதுவாக சர்வதேச நிறுவனத்தின் ஆதரவின் மூலம் அல்லது அனுப்புவதன் மூலம் வழங்கப்படுகின்றது.

**ஓர் இராஜாங்கக் குறிப்புரையானது கட்டாயமாகக் கொண்டிருக்க வேண்டியவை:**

- பெயர் மற்றும் பிறந்த திகதி
- பதவி மற்றும் அதன் பெயர்
- பயணத்தின் நோக்கம்
- கடமையின் சுருக்கமான விபரணம்
- பயணிக்கும் திகதி
- தங்குவதற்காக எதிர்பார்க்கப்பட்ட காலம் அல்லது ஐக்கிய அமெரிக்காவில் கடமைக்கான சுற்றுப் பயணம் மற்றும்,
- முதன்மையாளருடன் இணைந்து உடன் செல்கின்ற ஏனைய வீட்டு உறுப்பினர்கள் மற்றும் அவரைச் சார்ந்தவர்களின் பெயர்கள், உறவுநிலைகள் மற்றும் பிறந்த திகதிகள் (பொருத்தமாயின்).

  *குறிப்பு :* எந்தவொரு தகவல்களுக்காக, 90 நாட்களுக்கும் அதிகமாக அனுப்பும் நாட்டின் வெளிவிவகார அலுவலகத்தில் இராஜாங்கக் குறிப்புரை தயாரிக்கப்பட வேண்டும். (ஐக்கிய அமெரிக்காவின் மிஷன் அல்லது தூதரகம் அல்ல)
- அனுப்பும் அரசாங்கம் அல்லது நிறுவனத்திடமிருந்து பயண அதிகார சபை பயண நிகழ்ச்சி நிரல் கட்டளைகள் (பொருத்தமாயின்)

**நெருங்கிய குடும்ப உறவினர்களுக்காகத் தேவைப்படும் மேலதிக ஆவணங்கள்**

- முதன்மையாளரின் அந்தஸ்தினை உறுதிப்படுத்துதல் - இராஜாங்கக் குறிப்புரை அல்லது முதன்மையாளரின் தற்போதைய தொழில்தருநரிடமிருந்து அதற்குச் சமனான ஒரு கடிதம்.
- முதன்மையாளரின் குடியேற்றம் அல்லாத A அல்லது G வீசாவின் நிழற்பிரதி.

## துரிதப்படுத்தும் நேர்முகத்தேர்வு நியமனத்திற்கான வேண்டுகோள்கள்

பெரியளவிலான வீசா நேர்முகத்தேர்விற்காக எம்மால் துரிதப்படுத்தும் நேர்முகத்தேர்வு நியமனத்திற்கான அனைத்து வேண்டுகோள்களையும் சரிசெய்து கொடுக்க முடியாது. ஆயினும், நாம் அவர்களுக்கு அவசரமான மருத்துவச் சிகிச்சைகள், குடும்ப அங்கத்தவர்களின் மரணம், வியாபார ரீதியான காரணங்கள் (வரையறுக்கப்பட்ட சந்தர்ப்ப சூழ்நிலைகளில்), அல்லது கடுமையான பயண முடிவுறு திகதியிலுள்ள மாணவர்கள் ஆகியோருக்கு வீசா வழங்குவதற்கான எமது சிறந்த சேவையினைச் செய்வோம்.

ஒரு துரிதப்படுத்தும் நேர்முகத்தேர்வு நியமனத்தைக் கோருவதற்கு, எமது நியமன இணையத்தளத்தின் **துரிதப்படுத்தும் நியமனப் பிரிவுகள் (Expedited Appointment section)** என்ற பகுதியில் உள்ள படிமுறைகளைப் பின்பற்றவும். அழைப்பு நிலைய முகவர்களினால் (Call Centre Agents) துரிதப்படுத்தும் நேர்முகத்தேர்வு நியமன வேண்டுகோள்களினை வழங்க முடியாது, ஆனால் அவர்களால் இலத்திரனியல் நேரடி வழிச் செயற்பாட்டினூடாக (online process) விண்ணப்பதாரிகளுக்கு வழிகாட்டுவதற்கு உதவ முடியும்.

தூதரக அழைப்பு நிலையமானது மற்றும் இலத்திரனியல் வழி நேரடித் தொடர்பு இணையத்தளம் மூலம் வீசா விண்ணப்பப் படிவம் தொடர்பான செயல்முறைகள் மற்றும் ஒரு நேர்முகத்தேர்வு நியமனத்தின் வேண்டுகோள் மற்றும் திட்டம் தொடர்பான தொழிநுட்பவியல் உதவிகள் என்பன பற்றிய பொதுவான தகவல்களை வழங்க முடியும்.

### எமது தொடர்பு:

பூரண தகவல்களுக்காக GSS என்பதில் எமது தொடர்பு (Contact Us) என்ற பகுதிக்கு விஜயம் செய்யவும். எமது சேவை வழங்குநரைத் தொடர்பு கொள்வதற்கு வெவ்வேறு வழிகள் உள்ளன.

## மேலதிக வளங்கள்

- குடியேற்றம் அல்லாத வீசாவிற்காக அடிக்கடி வினாவப்படும் வினாக்கள் (Nonimmigrant Visa FAQs)
- ஐக்கிய அமெரிக்காவில் பயணம் மற்றும் சுற்றுலா (Travel and Tourism in the U.S.)
- சட்டரீதியான உரிமைகளும் பாதுகாப்பும் (Legal Rights and Protections)
- மோசடிகளைத தவிர்ப்பதற்கான எச்சரிக்கை (Fraud Prevention Warning)
- A தொடக்கம் Z வரையான குறிகாட்டிகள் (A to Z Index)

## எமது தொடர்பு

வாடிக்கையாளர் சேவை முகவர்கள் இலங்கை நேரப்படி, மு.ப 08.00 மணி தொடக்கம் பி.ப 08.00 மணி வரையும் ஐக்கிய அமெரிக்காவின் கீழைத்தேய பொதுத்தராதர நேரத்தின் படி மு.ப 08.00 மணி தொடக்கம் பி.ப 08.00 மணி வரையும் உங்களுக்கு உதவுவதற்குத் தயாராக உள்ளார்கள். அழைப்பு நிலையமானது ஐக்கிய அமெரிக்காவின் தகவல் அவதானிப்பின்படி, வார இறுதி நாட்களிலும் மற்றும் உள்நாட்டு விடுமுறை நாட்களிலும் மூடப்பட்டிருக்கும்.

இலங்கையிலிருந்து அழைப்பினை ஏற்படுத்துவதற்கு - 94-11-770-3703

ஐக்கிய அமெரிக்காவிலிருந்து அழைப்பினை ஏற்படுத்துவதற்கு - 1-703-988-3469

அல்லது நீங்கள் மின்னஞ்சல் மூலம் அனுப்புவதற்கு support-srilanka@ustraveldocs.com

## அரசாங்க முகவர் தொடர்புகள்

- ஐக்கிய அமெரிக்காவின் பிரஜாவுரிமை மற்றும் குடியேற்ற சேவைகள் (U.S. Citizenship and Immigration Services)
- ஐக்கிய அமெரிக்காவின் சுங்கம் மற்றும் எல்லைப் பாதுகாப்பு (U.S. Customs and Border Protection)
- ஐக்கிய அமெரிக்கா. அரசாங்கம் (USA.gov)
- ஐக்கிய அமெரிக்காவின் இராஜாங்கத் திணைக்களம் (U.S. Department of State)

**வீசாக்கள் (நுழைவிசைவுகள்)**
முகப்பு | **வீசாக்கள்**

தங்களின் உத்தேசிக்கப்பட்ட பயணம் மற்றும் ஏனைய சம்பவங்களின் நோக்கமானது ஐக்கிய அமெரிக்காவின் குடியேற்றச் சட்டத்தின் கீழ் எவ்வகையான வீசா தங்களுக்குத் தேவைப்படுகின்றது என்பதைத் தீர்மானிக்கும். நீங்கள் ஒரு வீசா விண்ணப்பதாரியாக இருப்பின், எதற்காக விண்ணப்பிக்கின்றீர்கள் என்ற வீசா தொடர்பான வகைப்பாட்டினைப் பெறுவதற்குரிய அனைத்துத் தேவைகளையும் சந்திக்கும் வகையில் நீங்கள் உங்களை நிலைநிறுத்துவது அவசியமானது.

- ஐக்கிய அமெரிக்காவிற்கான உங்கள் பயண நோக்கத்திற்குப் பொருத்தமான வீசா வகையினைத் தீர்மானிப்பதற்கு usvisas.state.gov என்ற எமது இணையத்தளத்தில் வீசா வகைகளின் விபரக் கொத்தினைப் (Directory of Visa Categories) நீங்கள் பார்வையிடலாம்.

குடியேற்றம் அல்லாத வீசா
குடியேற்ற வீசா

## வீசா என்றால் என்ன?

ஐக்கிய அமெரிக்காவிற்குள் நுழையும் வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் பொதுவாக முதலில் ஓர் ஐக்கிய அமெரிக்காவிற்கான வீசாவினைப் குடியுரிமைப் பயணியின் நாட்டில் வழங்கப்படுகின்ற பிரயாண ஆவணம், பயணம் செய்பவரின் கடவுச்சீட்டு என்பவற்றில் உள்ளவாறு பெற்றுக் கொள்ளவேண்டும்.

குறிப்பிட்ட சர்வதேசப் பயணிகள் இலவச வீசா பயணத்திற்கான தேவைகளை எதிர்கொள்வார்களாயின், வீசா ஒன்று இன்றி ஐக்கிய அமெரிக்காவிற்குப் பயணம் செய்வதற்குத் தகுதி உடையவர்கள் ஆவர்.

(குறிப்பு: ஐக்கிய அமெரிக்கப் பிரஜை ஒருவருக்குப் பயணத்திற்கான வீசா அவசியமில்லை. ஆயினும், அவர் வெளிநாட்டிற்குப் பயணிப்பதற்குத் திட்டமிடும்போது அவர் விஜயம் செய்ய விரும்பும் நாட்டின் தூதரகத்தின் மூலம் வழங்கப்படும் வீசா தேவைப்படலாம்).

- நாம் ஒவ்வொரு தூதரகத்திலும், ஆலோசனை இணையத்தளத்திலும் வீசாவிற்கான தேவைகள் மற்றும் வீசா விண்ணப்பத்திற்கான நடைமுறைச் செயற்பாடுகள் பற்றிய விபரமானதும் சரியானதுமான தகவல்களை அனுப்புவோம்.
- நாம் ஒவ்வொரு தூதரகத்திலும் ஆலோசனை இணையத்தளமான http://travel.state.gov இலும் குடியேற்ற வீசா அல்லாத நியமனங்களுக்கான காத்திருப்பு நேரத்தைப் பற்றிய தகவல்களை வழங்குவோம்.
- நாம் உங்களுக்கு எந்தவொரு வீசா நிராகரிப்பிற்கான காரணத்தைப் பற்றியும் விளக்கம் அளிப்போம்.

**உங்களுக்காக இன்னும் சில,**

- மாணவா்களே! நீங்கள் ஒரு நியமனத்தைப் பெறுவதற்கும், தகுதியாயின் உரிய நேரத்தில் வகுப்புக்களை ஆரம்பிப்பதற்கான வீசாவை நிச்சயப்படுத்துவதற்குரிய ஒவ்வொரு முயற்சியையும் நாம் உருவாக்குவோம்.
- மருத்துவ மற்றும் மனிதாபிமான அவசரப் பயணிகளே! வாழ்வை அச்சுறுத்தும் அவசர நிலைமைகளைச் சமாளிப்பதற்கான செயற்பாடுகளை நாம் துரிதப்படுத்துவோம்.
- வா்த்தகப் பயணிகளே! குறிப்பிட்ட அமெரிக்க வியாபார நடவடிக்கைகள் தொடா்பான விடயங்களைத் துரிதப்படுத்துவதற்கும், வா்த்தக நடவடிக்கைகள் தொடா்பான பயணங்களை எளிமைப்படுத்துவதற்கும் பொருத்தமான நுட்பங்களை நாம் நிறுவுவோம்.

**அதேவேளை, நாம் வீசா விண்ணப்பதாரியான உங்களிடம் எதிர்பார்ப்பது யாதெனில்,**

- சாத்தியமாயின், முன்னமே உங்களுடைய பயணம் மற்றும் வீசா விண்ணப்பப் படிவத்தினைத் திட்டமிடுக.
- உங்களுடைய விண்ணப்பப் படிவத்தினைச் சரியாகவும் பூரணமாகவும் பூா்த்தி செய்க.
- உங்களுடைய நோக்கத்தினையும் திட்டத்தினையும் பற்றித் தேவை ஏற்படும்போது விளக்குவதற்குத் தயாராகுக.
- நோ்முகத்தோ்வில் உங்களுடைய நோக்கத்தினைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் விபரிக்கக் கூடிய நிலையில் நீங்கள் உங்களைத் தயாா்ப்படுத்துக.

## எமது தொடர்பு:

எமது வாடிக்கையாளர் சேவைப் பிரதிநிதி ஒருவரைத் தொடர்பு கொள்வதற்கு தயவுசெய்து GSS என்பதிலுள்ள எமது தொடர்பு (GSS Contact Us) என்ற பகுதியில் பூரண தகவல்களைப் பெறுவதற்காக விஜயம் செய்யவும் அல்லது பின்வரும் தகவல் தொடர்பினை உபயோகிக்கவும்.

**தொலைபேசிஅழைப்பு நிலையம்:**

இலங்கையிலிருந்து அழைப்பினை ஏற்படுத்துவதற்கு 94-11-770-3703,

ஐக்கிய அமெரிக்காவிலிருந்து அழைப்பினை ஏற்படுத்துவதற்கு 1-703-988-3469

மின்னஞ்சல் முகவரி: support-srilanka@ustraveldocs.com

## வாடிக்கையாளர் சேவை விபரம்:

இராஜாங்கத் திணைக்களமானது வீசா செயற்பாடுகளை மிகவும் கடுமையான முறையிலும் ஆனால் ஐக்கிய அமெரிக்காவின் சிறந்த பாதுகாப்பிற்காக நியாயமான முறையிலும் முகாமை செய்கின்றது. எப்போதும் அறியப்படும் ஐக்கிய அமெரிக்காவிற்கான அத்தியாவசிய வெளிப்படைத் தன்மைக்கு நாம் கடமைப்படுகின்றோம். ஐக்கிய அமெரிக்காவிற்கான தங்களின் பயணத்தை நாம் வரவேற்று உற்சாகப்படுத்துகின்றோம்.

**வீசா விண்ணப்பதாரியாகிய உங்களுக்கு நாம் உறுதி கூறுவது யாதெனில்,**

- எம்மால் உங்களுக்கு வீசா வழங்க முடியாதவிடத்தும் கூட நாம் உங்களுடன் கௌரவத்துடனும் மரியாதையுடனும் நடந்து கொள்வோம்.
- நாம் தனித்தனியாக அல்லது உங்களுடைய தனிப்பட்ட விடயங்கள் தொடர்பாக கண்ணியமாக நடந்து கொள்வோம்.
- உங்களுக்கு வீசாவிற்கான நேர்முகத்தேர்வு புதியதாகவும் அல்லது ஒரு பயமுறுத்தும் அனுபவமாகவும் இருக்கலாம் என்பதனால் நீங்கள் ஒருவிதமான கலவர நிலையில் இருப்பீர்கள் என்பது எமக்கு ஞாபகத்தில் இருக்கும்.
- நாம் நேர்முகத்தேர்விற்காக உங்களுடைய பயணத் திட்டத்தினதும் நோக்கத்தினதும் சாத்தியமாயின், முழுமையான படத்தைப் பெறுவதற்குக் கிடைக்கப் பெறும் ஒரு வரையறுக்கப்பட்ட நேரத்தை உபயோகிப்போம்.
- வாணிபம், கல்வி மற்றும் ஏனைய முக்கியமான கடமைகளுக்கு உரிய நேரத்தில் பயண அனுமதிக்கான நியமனத்தைப் பெறுவதற்கு அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் நியாயமான முறையில் உதவி செய்வதற்கு நாம் எமது கிடைக்கப் பெறும் வளங்களை உபயோகிப்போம்.